**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள்கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள்... அருள்கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள்.

(1 பேதுரு: 4: 10-11)

ஏனெனில் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்துகொண்டு, மற்றவரைப் புறக்கணிப்பார். பணம், தீயதல்ல, ஆனால் பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர் (1 தீமோத்தேயு: 6:10) இயேசுவின் காலத்தில் பரிசேயர்களின் நோக்கம் என்ன? அவர்கள் அனைவரும் பணத்தாசை பிடித்தவர்களாகவும், மனிதருக்கு முன் தங்களை நியாயமானவர்கள் என்று உயர்த்திகொண்டு, கடவுளுக்கு முன் அருவருப்பானவர்களாகவும் இருந்தனர்.

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் **அநியாயமாகப் பணத்தைப் பெற்று,** அதை தாராளமாய் செலழிக்கவேண்டுமென்று இயேசு கூறவில்லை. இயேசு கூற முயற்சிக்கும் கொள்கை என்னவென்றால், செல்வத்தைப் பெறுவதற்கும், பயன்படுத்துவதற்கும் நாம் வெறும் மேற்பார்வையாளர்களாக இருக்கவேண்டும். என்று கூறுகிறார். அநீதியான வேலையாள் தன் தலைவனின் செல்வத்தை தன்னுடைய சொந்த முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக்கும் பயன்படுத்திக்கொண்டார். மாறாக இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள், நீதியுள்ள மேற்பார்வையாளர்களாக இருக்குமாறு விரும்புகிறார். நமக்குச் சொந்தமான **அனைத்தும் கடவுளிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட கொடை** என்பதை நாம் உணர்ந்தோமென்றால், நாம் அவரின் பணியாளர்கள் என்பதையும் உணர்ந்துகொள்வோம். தலைவரின் இலக்குகளுக்காக அவரின் வளங்களைப் பயன்படுத்தத் தான் நாம் இருக்கிறோம். நாம் நமது செல்வத்தைப் பிறரின் நன்மைக்காகப் பயன்படுத்த தாராள உள்ளத்தினராக இருக்க வேண்டும்.

உலக செல்வத்தைப் பொருத்தமட்டில் நமக்கு உரிமையில்லாத செல்வத்தில் நாம் நம்பிக்கையானவர்களாக இருக்கமுடியாவிட்டால், "உண்மையான செல்வத்தைப் பொருத்தமட்டில்" நாம் எவ்வாறு உண்மையுள்ளவர்களாக இருக்கமுடியும்? " உண்மையான செல்வம்" என்பது, கடவுளின் அரசில் அவருடைய பொறுப்பாளர் மற்றும் நமக்கிருக்கும் பொறுப்பு. கடவுளே நமது தலைவர் என்றால், நம்முடைய செல்வம் அவர் வசமுள்ளது. கடவுளை தம்முடைய தலைவராக கொண்டிருக்கும் உண்மையும் நம்பிக்கையும் உள்ள ஊழியனை கடவுள் தம் அரசைக் கட்டியெழுப்ப அழைத்துக்கொள்வார். கடவுளின் அரசைக் கட்டியெழுப்ப நம்முடைய வளங்கள் மற்றும் கொடைகளை நாம் பிறரோடுப் பகிர்ந்துப் பணிச் செய்வோம் என்பதை நினைவில் கொள்வோம். பிறர் காணாமல் முகமலர்ச்சியோடு கொடுப்பவரை கடவுள் அன்பு செய்கிறார். நினைவு கொள்ளுங்கள். "நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது" ❖

**இன்றைய வாசகங்கள்:**

ஆமோஸ்: 8: 4-7;

திருப்பாடல்: 113: 1-2, 4-8;

1 தீமோத்தேயு: 2: 1-8;

லூக்கா 16: 1-13 (அ) 10-13.

INTERNAL CIRCULATION ONLY
BUL 38/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

18 செப்டம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 25 ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:
**மலேசிய தினம் (செப் 16)**



# கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணி செய்யமுடியாது

விவிலியத்தில் பணத்தைப் பற்றி அதிகம் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, சபை உரையாளர் 5:10 -ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "பண ஆசை உள்ளவருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும், ஆவல் தீராது; செல்வத்தின்மேல் மிகுந்த ஆசை வைப்பவர் அதனால் பயனடையாமற்போகிறார்" இந்த வாரத்தின் மிகவும் ஆற்றல்வாய்ந்த செய்தி, நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்லவைப்பதுபோல, நம்மைக் கடுமையாகத் தைக்கிறது. எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது;